# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor / Publisher**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 33 October- 2020 Issue - 10**

ஆசிரியர் உரை

## நான் செத்தாலும் சாகிறேன்

ஏன் என்ன ஆச்சு? எதற்கு இப்படி ஒரு தலைப்பு என்று எண்ணுகிறீர்களா? ஒன்றும் ஆகவில்லை. தேவ தயவில் எல்லாம் நல்லபடியாகவே போய்க் கொண்டிருக்கிறது. தலைப்பிலுள்ள வார்த்தைகள் விரக்தியின் விளைவாகவே, வெறுப்பின் உச்சத்திலோ வெளிவந்தவைகள் அல்ல. ஆசானின் வழக்கமான நடை முறையின் ஓர் அங்கமே. எப்படியெனில், ஆசிரியர் உரைக்கான தலைப்பின் வார்த்தைகள் வேதாகமத்தின் பக்கங்களிலிருந்துதான் தெரிவு செய்யப்படும். அதுபோலத்தான் இந்தத் தலைப்பும். அப்படியானால் அச்சத்தை ஏற்படுத்தும் இச்சொற்றொடர் எங்கே இருக்கிறது? யார் இப்படிச் சொன்னது என்று கேட்கிறீர்கள், அப்படித்தானே! ஒட்டுமொத்த வேதாகமத்திலும் தனித்துவம் பெற்ற ஓர் நூல் உண்டு. அந்நூலில் தான் இவ் வார்த்தைகள் உள்ளது.

சரி, இப்படிச் சொன்னவர் ஒரு பெண்மணி. பெற்றோரை இழந்து ஆதரவற்ற ஓர் நிலையில், வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறரை எதிர் பார்த்திருந்தபோது அப்பெண் இப்படிச் சொல்லவில்லை. மாறாக, நூற்று இருபத்தேழு நாடுகளுக்கு மகாராணியாக மகுடம் சூட்டப் பட்டு, ஏகபோக செல்வாக்குடனும், உச்சபட்ச சொகுசுடனும் தன் வாழ்வை நடத்திக்கொண்டிருந்த நாட்களில் இப்படியாகச் சொன்னாள். வேதம் தெரிந்தவர்கள் இவளை இந்நேரம் இனம் கண்டிருப்பீர்கள். ஆம், இவள் வேறு யாருமல்ல, **எஸ்தர் மகாராணிதான்.**

மகாராணி எஸ்தரே, நீ துணிந்து செயல்படும்படியான நேரம் வந்துவிட்டது. ஏனோதானோ என்று இருந்தால், நீ குற்றவாளிக்

கூண்டில் நிற்க நேரிடும் என்று தன் வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாயால் எச்சரித்துச் சொல்லியனுப்பின புத்திமதிக்குப் பதிலாக சொல்லப்பட்ட வசனத்தில் நாம் இவ்வார்த்தைகளைக் காணலாம். **நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடி வரச்செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும், உபவாசம் பண்ணுவோம். இவ்வித மாகச் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்** (எஸ்தர் 4:16).

சரி, இப்பொழுது நம்முடைய வழக்கத்தின்படி இதற்கான பின்னணித் தகவல்களுக்குள்ளாகக் கடந்து வருவோம்.

பத்து அதிகாரங்கள் கொண்ட எஸ்தர் சரித்திர நூலில் **தேவன், கர்த்தர்** போன்ற வார்த்தைகள் ஓரிடத்தில் கூட இல்லை. இத்தனைக்கும் யூத ஜனங்களுக்கான தேவ வழிநடத்துதலும், அவருடைய பாதுகாப்பும் இந்நூலில் முழுமையாக விவரிக்கப் பட்டுள்ளது. ஆம், முற்றிலும் நாசமாக்கப்பட்டு, ஓர் இனத்தின் அடிச்சுவடே தெரியக் கூடாது என்று கங்கணம் கட்டி செயல்பட்ட நிலையில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட யூத இனம் எப்படிக் காக்கப்பட்டது என்பதின் சாராம்சமே இந்நூல்.

பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் ஒரு காலகட்டத்தில் பாபி லோனியப் பேரரசன் நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகை போட்டு அந்நேகரைப் பாழாக்கினான். அந்த அழிவிலிருந்து தப்பினவர்களை பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு சென்றான். அப்படிக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் தேவ முன்னறிவிப்பின்படி ஓர் எழுபது ஆண்டு கால சிறைவாசத்துக்குப் பிறகு மூன்று கட்டங்களாகத் திரும்பி வந்தனர். **ஆம், கி.மு**536 –ல் யெருபாபேல் தலைமையில் வந்தவர்கள் தேவாலயம் கட்டினர். பிறகு **கி.மு** 457 – ல் எஸ்றா தலைமையில் வந்தவர்கள் ஜனங்களின் ஆன்மீக நிலையைக் கட்டப் பாடுபட்டனர். தொடர்ந்து **கி.மு.** 444–ல் பெர்சிய அரசாங்கத்தின் ஆதரவோடு நெகேமியாவின் தலைமையில் வந்தவர்கள் எருசலேமின் அலங்க த்தைக் கட்டினர். ஆயினும், இந்த **மூன்று திரும்புதல்களிலும்** தாய் மண்ணுக்குத் **திரும்பி வராத** யூதர்கள், நம்மால் அறிய முடியாத காரணங்களுக்காக அடிமை நாட்டிலேயே தங்கிவிட்டனர். அப்படித் தங்கினவர்களின் பட்டியலில் வருகிறவர்கள்தான் **மொர்தெகாய், எஸ்தர்** போன்றவர்கள்.

இக்காலகட்டத்தில் ராஜாவாக இருந்தவன் அகாஸ்வேரு. இவன் பாபிலோனின் ஐந்தாம் ராஜா. இவன் தன் ராஜ்ய பாரத்தின் மூன்றாம் வருடத்தில் ஏக தடபுடலாக தன் ஊழியக்காரருக்கும், பிரபுக்களுக்கும் விருந்து பண்ணினான். தன் ஆளுகையின் கீழுள்ள 127 **நாடுகளைச்** சேர்ந்த மகத்தானவர்களும், பிரபுக்களும் இவன் சமூகத்தில் வந்து சேர்ந்தார்கள். அவன் தன் ராஜ்யத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும், அநேக நாளாகிய நூற்றெண்பது நாளளவும் விளங்கச் செய்து கொண்டிருந்தான். **விருந்தும் மருந்தும்** மூன்று நாள் என்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், இவன் 180 நாட்களுக்கு படோடாபம் காட்டியுள்ளான்.

ஏழாம் நாளிலே, ராஜா திராட்ச ரசத்தினால் களிப்பாயிருக்கும் போது, மகா ரூபவதியாயிருந்த ராஜ ஸ்திரீயாகிய வஸ்தியின் பேரழகை ஜனங்களுக்கும், பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக ராஜாவுக்கு முன்பாக அழைத்து வரும்படி கட்டளையிட்டான் (எஸ்தர் 1:10,11). பித்துப் பிடித்த வன் போலிருக்கிறதே என்று எண்ணும்படியாக உள்ளது. இப்படியும் ஒரு கணவன் இருப்பானா?

அகாஸ்வேருவின் மனைவி வஸ்தி ஒரு குடும்பப்பாங்கான பெண்போல் தெரிகிறது. விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் தன் கற்புக்கும், மானத்திற்கும் முக்கியத்துவம் தந்தாள். அதினி மித்தம் ராஜாத்தி பட்டம் பறிபோனது. அவளுடைய ராஜமேன்மை அவளைப் பார்க்கிலும் **உத்தமியாகிய** வேறொருத்திக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆஹா, **உத்தமி**க்கான பொருள் எப்படியென்று பாருங்கள்! தன் கற்புக்கும், தன் மானத்திற்கும், முக்கியம் தந்தவள் உத்தமி இல்லையாம்! அப்படியானால், ராஜாவின் பார்வையிலும், அவனுடைய அடிவருடிகளின் பார்வையிலும் யார் உத்தமி என்பதற்கான இலக்கணம் பார்த்தீர்களா? பொல்லாத உலகமடா!

அதன் பிறகு, அடுத்தகட்ட நகர்வு ஆரம்பிக்கிறது. தூக்கி எறியப்பட்ட வஸ்திக்குப் பதிலாக அடுத்த ராணியைத் தேடும். படலம் தொடங்கியது. தேவன் என்ற வார்த்தை இந்நூலில் இல்லா விட்டாலும் தேவனுடைய வல்ல கரம் கிரியை நடப்பிப்பதை நாம் காணமுடியும். ஆம், தேவனுடைய வழிநடத்துதல் மற்றும் மொர்தெகாயின் புத்திக்கூர்மையால் அடிமைப் பெண்ணாக வாழ்ந்த நாட்டில் எஸ்தர் பட்டத்து மகாராணியானாள் (எஸ்தர் 2:7) இது ஏதோ அவளுடைய அதிர்ஷ்டத்தால் நடந்த ஒன்று அல்ல. மாறாக, அவளுடைய கீழ்ப்படிதலுக்குக் கிடைத்த வெகுமதி. **எஸ்தர், மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி, தன்**

**பூர்வோத்தரத்தையும், தன் குலத்தையும் தெரிவிக்கா திருந்தாள். எஸ்தர் மொர்தெகாயின் இடத்தில் வளர்ந்தபோது அவன் சொற்கேட்டு நடந்தது போல, இப் பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள்** (வ.20). பதவியும், பவிசும் வந்த வுடன் ஏறிய ஏணியை எட்டி உதைக்கும் அவல நிலையைத்தானே நம்முடைய நாட்களில் பார்க்கிறோம். ஆனால், எஸ்தர் முற்றிலும் வேறுபட்டவள். தேவ தயவு சும்மா கிடைக்குமா?

சம்பவங்களின் திருப்பம் இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. ஆமான் என்ற துஷ்ட மனிதன் காட்சியில் இணைகிறான். எங்கி ருந்து வந்தான் என்ற விபரம் இல்லை. ஆனால், இவனுடைய செயல்பாட்டைக் கவனிக்கும்போது தகுதியும், தரமும் இவனி டத்தில் மருந்துக்குக்கூட இல்லையென்பது நிதர்சனமாகத் தெரிகிறது. ஆயினும், ராஜாவாகிய அகாஸ்வேரு ஆமானை மேன்மைப்படுத்தி, தன்னிடத்தில் இருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்தி வைத்தான் (எஸ்தர் 3:1). தகுதியும், தரமும் இல்லாத சிலர் சில நேரங்களில் உச்சம் தொட்டு விடுகிறார்கள். என்னசெய்வது? நிலை உயர்ந்த பிறகாகிலும் தன்னை மாற்றியிருக்கலாம். மாறவில்லை. அது தான் அதிகார போதை தலைக்கு ஏறிவிடுகிறதே!

இந்த ஆணவம் பிடித்த ஆமான், யூதனாகிய மொர்தெகாய் என்ற தனிமனிதன் தனக்கு **சலாம் போட** மறுக்கிறான் என்ற ஒற்றை காரணத்திற்காக, ஒட்டுமொத்த யூத இனத்தையே கூண் டோடு அழிக்க சபதமேற்று, அதற்கான சதித்திட்ட வேலைகளில் வெகு மும்முரமாய் இறங்கினான். இவனுடைய வசீகர வார்த்தைகளில் மயங்கின ராஜா, தன் முத்திரை மோதிரத்தை கழற்றி ஆமானிடம் கொடுத்து உன் இஷ்டப்படி செய்யலாம் என்ற அனுமதியும் கொடுத்து விட்டான். அதினிமித்தம் **ஆதார் மாதமான பன்னிரெண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர், பெரியோர், குழந்தைகள், ஸ்திரீகள், ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும் அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப் பட்டது** (3:13). நடந்தயாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி சாம்பல் போட்டுக் கொண்டு நகரத்தின் நடுவிலே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக் கொண்டு போனான். **யூதர்களை அழிக்கும் படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலை எஸ்தருக்குக் காண்பித்து அவள் அகத்தியமாய் ராஜவினிடம் போய் அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக மன்றாடவும்**

**வேண்டுமென்று சொல்லச் சொன்னான் 4:8.** நடைமுறைச் சட்டச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, எஸ்தர் தயக்கம் காட்டின போது, மொர்தெகாய்.... **நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான்** (4:14). **இந்த எச்சரிப்புக்குப் பிறகு தான் இவ்விதமாகச் சட்டத்தைத மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன், நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள். புரிகிறதா?** இப்படித் துணிந்து செயல்பட்டு, யூத இணத்தைக் காப்பாற்றியதன் மூலம், யோவான் ஸ்நானகனுக்கு முன்பாகவே இயேசுவுக்கான வழியை ஆயத்தம் செய்திருக்கிறான். யூதகுலம் ஒட்டுமொத்தமாக துடைத்தெறியப்பட்டிருக்குமானால் நிலைமை என்னவாயிருக்கும்!? எஸ்தரே உனக்கு வாழ்த்துக்கள்.

இப்பொழுது எஸ்தர் நமக்குக் கிடைக்கும் பாடம் என்னவென்று பார்ப்போம்.

### I. தகப்பனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தாள்

**நான் செத்தாலும் சாகிறேன்** என்னும் எஸ்தரின் வார்த்தையிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதற்பாடம், தகப்பனுடைய பக்திகேதுவான வார்த்தைகளை எந்நிலையிலும் ஏற்றுக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பது.

எஸ்தர் மொர்தெகாயின் சிறிய தகப்பன் மகள். அதாவது, முறைப்படி பார்த்தாள் தங்கை. ஆயினும், எஸ்தருக்குத் தாய், தகப்பன் இல்லாததால், எஸ்தரைத் தன் மகளாக ஏற்று வளர்த்தான் (2:7). பெற்றெடுத்த தந்தையாக இல்லாவிட்டாலும், அவனுடைய ஆலோசனைகளுக்கு மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் நடந்து வந்தாள். இந்த இடத்தில் இவள் செயலை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. எப்படியெனில், ஆதரவற்ற நேரத்தில் உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்கப்படும்போது இயல்பாகவே அனைவரும் அடங்கி நடப்பர். ஆனால், இந்த எஸ்தரோ தான் பட்டத்து ராணியாக மகுடம் சூட்டப்பட்டு சகல சம்பத்தோடு வாழ்ந்து வந்த நிலையிலும், தன்னை ஆளாக்கி, அழகு பார்த்த வளர்ப்பு தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்துள்ளாளே, இதை என்னவென்று சொல்வது?! அதுவும் தன் உயிரையே விலையாகக் கொடுக்க நேரிடும் என்ற நிலை வந்தபோதும் கூட, தகப்பன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்துள்ளாள்.

அருமையானவர்களே! என் வளர்ப்புத் தந்தையின் சொல் என் உயிரைக்காட்டிலும் எனக்கு மேலானது என்னும் அவள் நிலைப்பாட்டை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வோடு பொருத்திப் பார்ப்போம். நம்மை பிரம்மிக்கத்தக்க அதிசயமாய்

உண்டாக்கி [சங்.139:14]. நம் எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுத்து காத்து வருபவர் நம் தேவன் [அப். 17:25]. அதுமாத்திரமல்ல, ... நாம் அனுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய் கொடுகிறவரும் அவரே [1தீமோ. 6:17]. எஸ்தருக்கு மொர்தெகாயின் மூலம் கிடைத்தது அதிகபட்சமாக உணவு, உடை, இருப்பிடம். ஆனால், பரலோகத் தேவன் மூலம் நமக்குக் கிடைத்திருப்பதே சரீரம், ஜீவன், சுவாசம் மற்றும் சகலவித நன்மைகள். இன்னும் நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருந்தால், ஆவிக்குரிய **சகல ஆசீர்வாதங்களையும்** பெற்றுக் கொள்ள முடியும். [எபே. 1:3]. அத்தோடு பரலோகத் தேவனை, **அப்பா பிதாவே** என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரமும் கிடைக்கிறது [ரோமர்.8:15].

வெறும் சரீர நன்மைகளை மாத்திரம் பெற்றுக் கொண்ட எஸ்தர் மொர்தெகாயின் வார்த்தைகளுக்காக உயிரை விடவும் தயாராக இருந்தபோது, சரீர நன்மைகளையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் ஒரு சேரத்தந்திருக்கிறப் பரலோக தகப்பனுடைய வேத வசனங் களுக்கு நம்மை அப்படியே கீழ்ப்படுத்துவதில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? நெஞ்சிலே கையை வைத்து சிந்திப்போம். தன்னை நியாயந்தீர்க்காத மெர்தேகாயின் வார்த்தைகளுக்கு எஸ்தர் அப்படியே கீழ்படிந்துள்ளாளே. ஆனால், நம்மை நியாயந் தீர்க்கும் அதிகாரம் கொண்ட [யோவான் 12:48] கிறிஸ்துவின் வார்த்தைகளை அற்பமாக எண்ணிக் கீழ்ப்படிய மறுக்கிறோமே. இது நியாயமா? எந்நிலையிலும் நாம் நம்மைத் தகப்பனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்படுத்துவதில் எஸ்தரின் வழிநடப்போம்.

II. **தன் ஜனங்களுக்காக செயல்பட துணிந்து முன்வந்தாள்.**

**நான் செத்தாலும் சாகிறேன்** என்னும் எஸ்தரின் வார்த்தை களிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், ஆவிக்குரிய உறவுகளுக்காக எச்சூழலிலும் செயல்படுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பது.

நீ இந்தக்காலத்தில் மௌனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும் என்பதே மொர்தெகாயின் எச்சரிப்பு. யாருக்கு சகாயமும் இரட்சிப்பும் தேவைப்பட்டது? **யூதருக்கு, தன் ஜனங்களுக்கு,** தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு. அங்கே மொர் தெகாய் தனக்கு சகாயம் வேண்டுமென்று கேட்கவில்லை.

ஒருவேளை, மொர்தெகாய் அப்படிக் கேட்டிருந்தால், எஸ்தருக்கு அது மிகச்சுலபமான ஒன்றாக இருந்திருக்கும். ஆனால், ஒட்டு மொத்த யூத குலத்திற்கு சகாயமும் இரட்சிப்பும் தேவை என்று வலியுறுத்தினான். அங்கே, எஸ்தர் தன் ஜனங்களின் இடுக்கணில் உதவத் தீர்மானித்தாள் உயிரைப் பணயம் வைத்து. சரி, எஸ்தரின் இந்த எண்ண ஓட்டத்தை நம்முடைய ஆன்மீக வாழ்வின் காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் போதிக்கும் சத்தான கருத்துக்களில் முத்தான ஒன்று **சகோதர சிநேகம்** அல்லது **சகோதர அன்பு.** இயேசுவானவர், நீங்கள் ஒரிவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற **புதிதான கட்டளையை** உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றார். [யோவான் 3:34]. இந்தப் புதிய கட்டளையின்படியாக கிறிஸ்து எப்படி நம்மில் அன்பு கூர்ந்தார்? பவுலடியார் இது குறித்து எபேசியருக்கு சொல்வதைப் பாருங்கள். கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், **பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல,** நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் [எபேசியர் 5:2] என்று.

அருமையானவர்களே! இந்த கிறிஸ்துவின் சிந்தை தான் அந்நாளில் எஸ்தருக்குள்ளாக இருந்துள்ளது. ஆகவே தான், தன் ஜனங்களுக்காக **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்ல முடிந்தது. இன்னும், தன் ஜனங்கள் மீது அவள் கொண்டிருந்த பற்றைப் பாருங்கள். **என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக் கூடும் என்றாள்? [எஸ்தர் 8:6].** இந்த அளவு நாம் சகோதர சிநேகத்தில் பற்றோடும், உறுதியோடும் இருக்கிறோமா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் உபதேசம் அநேக இடங்களில் சகோதர சிநேகம் பற்றிப் பேசுகிறது. சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள் [ரோமர் 12:10] சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது [எபி. 13:1]. ஆகையால், நம் பக்தி வாழ்வில் சகோதர சிநேகத்தின் மேன்மையை இனிமேலாகிலும் உணர்ந்து, சகோதரர்களின் சரீர நலனையும், ஆவிக்குரிய நலனையும் கவனத்தில் எடுத்து, அதற்காகப் பெரிய விலை கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் எஸ்தரின் சிந்தையைப் பெற்று வாழத் தீர்மானிப்போம்.

### III. தன் தேவனுக்காக எதற்கும் தயாராக இருந்தாள்.

**நான் செத்தாலும் சாகிறேன்** என்னும் எஸ்தரின் வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னும் ஒரு பாடம்,

தேவனுக்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பது.

எஸ்தர் தன் தகப்பனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்ததும், தன் ஜனங்களுக்காக துணிந்து செயல்பட முடிவெடுத்ததும் எதினிமித்தம் நடந்தது? கண்டிப்பாக அவள் நம்பியிருந்த தேவன் நிமித்தமே. தேவனைப்பற்றிய காரியங்கள் அவளுக்கு தீமோத்தேயு போல சிறு பிராயத்திலேயே போதிக்கப் பட்டிருக்கிறது என்றே தெரிகிறது. மொர்தெகாய் பக்தியும், வைராக்கியமுள்ள யூதனாக இருந்தபடியால் இதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். ஆபிரகாமைக் குறித்து பார்க்கும் போது, **கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப்பின் வரும் தன் வீட்டாரருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளை யிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்** [ஆதி. 18:9]

அருமையானவர்களே! பிள்ளைகளை நடக்க வேண்டி வழியிலே நடத்துவதும் [நீதி.22:6]. ஏற்ற சமயங்களில் அவர் களுக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்வதும் [நீதி. 25:11] எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள். அதைத் தான் எஸ்தரிடம் நாம் பார்க்க முடிகிறது. தன் வளர்ப்புத் தந்தைக்காக, தங்கள் ஜனங்களுக்காகச் செயல்பட்டது போல் மேலெழுந்த வாரியாக தெரிந்தாலும் , அதைத் தாண்டி அவள் தன் **தகப்பனின் தேவனுக்காக**, தன் **ஜனங்களின் தேவனுக்காக** செயல் பட்டிருக்கிறாள் என்பதே உண்மை.

அப்படியானால், தேவனுக்கான நம்முடைய செயல்பாடுகள் எப்படி? சொல்லுங்கள். ''**கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுகிறேன்** [பிலி. 3:7]. ''**கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்**'' [பிலி. 1:21] என்று சொன்ன பவுலடியாருக்குள்ளாக எஸ்தரின் எண்ண ஓட்டம் இருந்ததா அல்லது என் தகப்பனுக்காக, என் ஜனங்களுக்காக செத்தாலும் சாகிறேன் என்ற எஸ்தருக்குள்ளாக பவுலின் சிந்தை இருந்ததா என்பது விவாதத்திற்குரிய ஒன்றாக அல்லவா இருக்கிறது! பவுலடியாருக்கே சவால் விடுகிறாளே. நாமும் கூட நம் தேவனுக்காக, தேவனுடைய வார்த்தைக்காக, கிறிஸ்துவின் சபைக்காக, கிறிஸ்துவின் உபதேசத்திற்காக தியாகம் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இருப்போமா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

# கிறிஸ்தவத்தின் செல்வாக்கு

Bro. J.C. **சோட்**

**கி**றிஸ்தவம் இவ்வுலகில் எவ்வளவு பெரிய செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறதென்று என்றாவது யோசித்ததுண்டா? இது ஜனங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிற காரியங்களுக்கும் பொருந்தும், விசுவாசியாத காரியங்களுக்கும் பொருந்தும். நம் நாட்டில் மிகக் குறைந்த சதவீத மக்களே கிறிஸ்தவத்தை தழுவியிருந்தாலும் கூட அது எல்லா தரப்பு மக்களிடத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது

நாட்டுச் சட்டங்களில் குறிப்பாக திருமணச் சட்டங் களில் காணப்படும் ஒழுக்க நெறிகள், கொடுக்கல் வாங்கல்களில் இருக்க வேண்டிய நேர்மை மற்றும் கொலை போன்ற பெருங்குற்றங்களுக்குத் தண்டனை போன்றவைகளெல்லாம் வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்டவைகள் தான். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை, கிறிஸ்துவுக்கு முன்பு, கிறிஸ்துவுக்கு பின்பு அதாவது கி.மு, கி.பி என்று தான் உலக வரலாறே பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் மொழி, கலை மற்றும் இலக்கியத்தின் மீது கிறிஸ்தவம் எப்படிப்பட்ட செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை எல்லோரும் அறிவார்கள். இக்காரியங்களை பலர் அறியாமலிருக்கலாம், இருந்தபோதிலும் இது தான் உண்மை.

கிறிஸ்தவம் இல்லையென்றால் ஒட்டு மொத்த உலகமும் எப்படியிருந்திருக்கும்? கிறிஸ்தவம் இவ்வுலகத்தை விட்டு அழிக்கப்பட்டிருந்தால் நமக்கு என்ன நேரிட்டிருக்கும்? அது, நிச்சயமாக பயங்கரமாயிருந்திருக்கும்.

கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபிறகு மனித வாழ்க்கை யில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஈராயிரம் வருடங்களுக்கு முன்பு கிறிஸ்து இவ்வுலகத் திற்கு வந்து மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்து இவ்வுலத்திற்கு வந்தபோது அவரிடத்தில் படைபலம் இல்லாதிருந்தது. அவர் யுத்தத்தில் இரத்தம் சிந்தவில்லை. ஆனாலும், அவர் இவ்வுலகை வென்றார். கிறிஸ்து இவ் வுலகத்தை மாற்றியது போல் எந்த ஒரு மனிதனும் மாற்றவில்லை, மாற்றவும் முடியாது.

இன்று இருக்கும் கிறிஸ்தவம், கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தார் என்பதற்கு மாத்திரமல்லாமல், அவர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதற்கும் சான்றாயிருக்கிறது. இவ்வுலகிலுள்ள எல்லா மக்களின் வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து ஏதோ ஒரு விதத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வுலக மக்கள் தொகையில் பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக ஏற்றுக்கொள்ளாத பட்சத்திலும், இவ்வளவு பெரிய தாக்கம் கிறிஸ்துவால் ஏற்பட்டிருக்கிறதென்றால், பெரும்பாலானோர் அவரை ஏற்றுக்கொண்டிருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

உலகளாவிய அளவில் கிறிஸ்தவம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பகையுணர்வு, பொறாமை போன்றவைகளுக்குப் பதிலாக அன்பும், அரவணைப்பும் பெருகி யுத்தங்கள் ஓய்ந்திருக்கும். பொய், களவு, கொலை போன்றவைகள் ஒழிக்கப்பட்டிருக்கும். ஒழுக்கக்கேடு மற்றும் எல்லாவகையான பாவங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் எல்லோரும் பூரணராகிவிடுவார்கள், பாவமற்ற வாழ்க்கை வாழ்வார்கள் என்று பொருள்படாது. ஆனால், நன்மையானவைகளை நோக்கி உலகம் பயணிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மார்க்கப்பிரிவினை கிறிஸ்தவமே மனிதன் மீது ஒழுக்க ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும்போது, எல்லா ஜனங்களும் தூய கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டால், அது உலகத்திற்கு என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள்! கிறிஸ்துவின் போதனைகள் உலகில் காணப்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் அருமருந்தாய் இருக்கிறபடியால் அதன் விளைவு ஒரு புதிய சமுதாயமாயிருக்கும். மனிதன் இதுகாறும் அறிந்திராத நன்மையான காரியங்களாயிருக்கும். கிறிஸ்துவின் உபதேசம் உலகிலுள்ள மக்களை ஒருங்கிணைக்கும். எல்லோரும் சகோதர, சகோதரிகளாயிருந்து மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து அக்கறையுடையவர்களாயிருப்போம். பசி, பஞ்சம், பட்டினி அறவே எல்லா தேசங்களிலிருந்தும் நீக்கப்பட்டிருக்கும். எல்லா மனிதர்களும் தங்கள் சக மனிதர்களுக்கு உதவி செய்யத்தக்கதாக வேலை செய்வார்கள். பகிர்வு அதிகமாக இருக்கும். அதினிமித்தம் எல்லோரும் நன்மை அடைவார்கள்.

பக்திப்பிரகாரமாக, எல்லாரும் ஒரே தேவனைத் தொழுது, ஒரே இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, வேதாகமத்தால் மாத்திரம் வழிநடத்தப்பட்டு ஒரே சபையின் அங்கத்தினர்களாயிருந்திருப்பார்கள். எல்லாச் சபைகளுக்கும் ஒரே நாமம் தரிக்கப்பட்டு எல்லோரும் ஒரே விதமான சுவிசேஷத்தைப் போதிப்பார்கள். ஆகையால், எல்லோரும் பாவ மன்னிப்பை அனுபவிப்பார்கள். இதினிமித்தம் எல்லோருக்கும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டாகும்.

நிச்சயமாகவே, ஒட்டுமொத்த உலகமும் கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் ஏற்றுக்கொண்டால் எப்படிப்பட்ட அனுகூலமான சூழ்நிலை இவ்வுலகில் காணப்படும் என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இது சாத்தியமாக இருந்தாலும்கூட, இது நடப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதன் பொருள் நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து , உங்கள் வாழ்க்கையில் அவரை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொருள்படாது. நீங்கள் அவரிடத்திலிருந்து கற்றுக்கொண்டு அவரிடத்தில் வந்து, அவரை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தால் அவர் உங்களை இரட்சித்து, உங்கள் வாழ்வை ஆசீர்வதிப்பார். அதன் பின்பு ஒரு கிறிஸ்தவனாக நீங்கள் அவருக்காக வாழ்ந்து அவருக்கு சேவை செய்யும்போது, அவர் உங்களை ஆசீர்வதிப்பது மாத்திரமல்லாமல் அநேகரை ஆசீர்வதிக்க உங்கள் மூலமாகக் கிரியைகளையும் நடப்பிப்பார்.

---

## கிறிஸ்துவில் வெற்றி

**வாழ்க்கையில் வெற்றி கொலோ (1:27)**

**மரணத்தில் வெற்றி மத்தேயு (16:19)**

**நித்தியத்தில் வெற்றி எபேசியர் (4:8)**

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே**

**நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்**

பெண்கள் பகுதி

## பரிசுத்த ஆவியானவரால் நற்சாட்சி பெற்றவர்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்தவ உலகிலே அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றித் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் அப். 7:58–ல் நாம் வாசிக்கிறபடி பவுலினுடைய பெயர் **சவுல்** என்பதாகும். பவுல் சிலிசியா நாட்டுக்குத் தலைநகரமாகிய **தர்சு** என்னப்பட்ட ஊரிலே பிறந்தார். எருசலேமிலே கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் கொடுத்த போதனையை கற்றுக் கொண்டார். இந்த அப்போஸ்தலன் பவுல் மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டார்.

அப்போஸ்தலன் பவுல் 13 நிருபங்களை எழுதினார். அதில் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களிலும் பவுல் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவி யானவரால் ஏவப்பட்டு தீமோத்தேயுவுக்கு அளிக்கிறார். விசு வாசத்தில் தான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்று சொல்வதிலிருந்து பவுல் தீமோத்தேயுவின் மேல் வைத்திருக்கும் அன்பும், நம்பிக்கையும், வெளிப்படுகிறது. சின்ன ஆசியாவில் பிறந்தவனாகிய இவனுடைய தகப்பன் கிரேக்கன், தாய் யூத ஸ்திரீ இவன் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும் இவனைச் சிறுபிராய முதலே யூதருடைய வேத சாஸ்திரத்தில் நன்றாய் பழக்கி வந்தார்கள். பவுல் முதல்முறை லீஸ்திராவுக்கு வரும்போது இவனும், இவனுடைய தாயாரும் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்ததாகத் தோன்றுகிறது. ஏனென்றால் பவுல் இரண்டாம் தரம் வரும்போது தீமோத்தேயு சபையில் பெயர் பெற்றவனாயிருந்தான் (அப்.16:1). இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இவனைத் தமக்குத் தோழனாக ஏற்படுத்திக் கொண்டார் (அப்.16:3). பவுலோடு சுவிசேஷம் செய்யும் பொருட்டு லீஸ்திராவிலுள்ள மூப்பர்களும், பவுலும் இவனைப் பிரதிஷ்டை செய்தார்கள். (I தீமோத்.4:14 ; II தீமோத்.1:6).

பவுல் மூன்றாம் பிரயாணம் பண்ணும்போது தீமோத்தேயு எபேசு பட்டணத்தில் பவுலோடு தங்கியிருந்து, பின்பு மக்கெதொனியா வுக்குப் போனான் (அப்.19:22). பவுல் ரோமாபுரியில் சிறைச் சாலையில் இருந்தபோது தீமோத்தேயு அவருடன் இருந்தான் (பிலி.1:1 ;2:9, கொலோ.1:1 ;பிலே.1). பவுல் இரண்டாந்தரம் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும்போது தீமோத்தேயு வைத் தன்னிடம் வரும்படி அழைத்தார். (2. திமோத்.4:9,21) இதற்கு பின்பு தீமோத்தேயு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான் (எபி.13:23).

பிரியமானவர்களே, மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயுவைப்பற்றி ஓரளவு நமக்கு விளக்கியிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும்போதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுலைக்கொண்டு இப்படியாகக் கூறு கிறார். **உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத் திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக் கேயாளுக் குள்ளும் நிலைத்திருந்து; அது உனக்குள்ளும் நிலைத் திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.** II தீமோத்.1:4,5]. ஒரு தீவிரமான ஊழியத்தை தீமோத்தேயு செய்தா னென்றால், அதற்குக் காரணம் அவனுக்குள்ளிருந்த மாயமற்ற விசுவாசம் இந்த மாயமற்ற விசுவாவம் அவனுக்கு எப்படி கிட்டியது என்றால், அவனுடைய தாயாகிய ஐனிக்கேயாள் மூலம்தான். ஐனிக்கேயாள் தான் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருந்ததை, தன் மகனுக்கும் ஊட்டி வளர்த்தாள். சிறுபிராய முதலே அவள் அவனுக்கு தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தைக் கற்றுக்கொடுத்ததினால்தான் அவன் இவ்வளவு சீக்கிரம் அப்போஸ்தலன் பவுலோடு சேர்ந்து, பலமாய் உபயோகப்படுத்தப்பட்டான். வாலிப வயதிலேயே சுவிசேஷப் பயணம் செய்ய முடிந்தது.

இன்றைக்குள்ள தாய்மார்கள் எத்தனைபேர் ஐனிக்கேயாளைப் போல் இருக்கிறோம். தேவன் மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதில் உலகத்திலும், உலகத்தில் உள்ள காரியங்களிலும் விசுவாசம் வைக்க நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். உலகக் கல்வி, ஞானம், அறிவு, கேள்வி இவைகளில் தன் மக்கள் சிறந்து விளங்க வேண்டும். பேரும், புகழும் பெற வேண்டும் என்றுதான் அநேக தாய்மார்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள் தேவனுக் கடுத்த காரியங்களைத் தவிர மற்ற எல்லாமே இக்கால இளைஞர் களுக்குத் தெரிகிறது. விசுவாசமில்லாமல் பிள்ளைகள் வளர்தி ருக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் பெற்றோர் தான்; அதிலும் குறிப்பாக தாய்மார்கள் தான் காரணம்.

II தீமோத் 3:15ல் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத் தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்று உனக்குத் தெரியும் என பவுல் கூறுகிறார். சிறுவயது முதல் தீமோத்தேயு வேதத்தை நேசித்தான்.

வாசித்தான், இவ்வாறு செய்ய வைத்தது அவன் தாய், நாமும் கூட நம் பிள்ளைகளை சிறுவயது முதற்கொண்டே வசனங்களை வாசிக்கச் செய்ய வேண்டும். அது அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசீர்வாதமுள்ளதாக அமையும். சங்கீதக்காரன் கூறும்போது **உம்முடைய கட்டளைகளை கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கி றேன். உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிற படியால் எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக் கிறேன்** (சங்.119:99,100) என்று கூறுகிறார். வேத வசனம் ஒருவனை ஞானவானாக்குகிறது. இந்த இரகசியத்தை அறிந்து தான் ஐனிக்கேயாள் தன் மகனுக்கு வேதத்தை வாசிக்கக் கற்றுக் கொடுத்தாள் போலும்.

II தீமோத்தேயு:2:3–ல் **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கநுபவி** என்கிறார். II தீமோத் 4:5 லும் **தீங்கநுபவி** என்று தீமோத்தேயுவிடம் கூறுகிறார். இவ்விதமாக ஒரு பக்குவமான, ஊழியனாக தீமோத்தேயு சிறந்து விளங்கு கிறான். துன்பத்தினுடனே சென்று சுவிசேஷத்தை அறிவிக் கிறான். சிறையில் அடைக்கப்படுகிறான். இப்படி யெல்லாம் ஒரு நல்ல தீமோத்தேயுவை நாம் வேதத்தில் காணமுடிகிறதென்றால் அது அவன் தாயினுடைய முயற்சிதான்.

இந்த தாய்க்கு அந்த விசுவாசமானது அவளுடைய தாயாகிய லோவிசாளுக்குள் இருந்து வந்தது. தாய், பாட்டி ஆகிய இருவருக் குள்ளும் இருந்த விசுவாசம்தான் தீமோத்தேயுவை வல்லமை யுள்ளவனாக மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! நாமும் நம் பிள்ளைகளைத் தேவனுக்காக வளர்ப்போம், தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முதல் இடத்தை நம் பிள்ளைகள் கொடுக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டில் ஓர் இளைஞனான தீமோத் தேயு விசுவாசமுள்ளவனாய் வாழ்ந்தானென்றால், இன்றைக்கும் 21ம் நூற்றாணடில் வாழும் நாமும் நம் பிள்ளைகளை தீமோத் தேயுக்களாக வளர்க்க முடியும். சுவிசேஷத்தை, உண்மைச் சத்திய த்தைக் கூற, வேதாகமத்தில் உள்ள ஒரே சபையை உலகிற்கு பறை சாற்ற இளைஞர்கள் தேவை. நம் பிள்ளைகளை தேவனுக்காய் அர்ப்பணிப்போம். நாமும் ஐனிக்கேயாளை போல் இருப்பாம். ஐனிக்கேயாளும், லோவிசாளும் பரிசுத்த ஆவியான வரால் நினைவு கூரப்பட்டு வேதாகமத்தில் நற்சாட்சி பெற்றது போல நாமும் தேவனால் நினைவு கூரப்பட்டு நம் மக்களோடு பரலோகத் தில் தேவனோடு என்றென்றும் அவரோடு நிலைத்திருப்போம். அப்படி வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக! ஆமென்! ✝

# இக்கட்டான நேரங்களில்....

Dr. ஏபில் நாயகம்

இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். ரோமர் 15 – ம் அதிகாரம் 4ம் வசனம் இப்படியாக சொல்கிறது. **தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ள வர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்று** நம் அனுதின வாழ்வில் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போதும், நாம் நினைத்ததற்கு மாறான ஒரு காரியம் நிகழும் போதும் நாம் சோர்வடைவதும், துவண்டு போவதும் உண்டு. சில சமயம் தேவன் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தையே தளர்வடையச் செய்யும் அளவிற்கு நாம் சோர்வடைந்துவிடுவதும் உண்டு. அப்படிப்பட்ட நேரங்களில் **ஏன் எனக்கு இப்படி நடக்கிறது? தேவன் ஏன் இதை அனுமதிக்கிறார், இது கஷ்டம் என்று அவருக்கு தெரியாதா, தேவனுக்கு இரக்கமில்லையா** என்று கேள்விகள் பல நம்முடைய எண்ணங்களில் தோன்றும். தேவனுடைய வழிநடத்துதலை அப்படிப்பட்ட நேரங்களில் புரிந்து கொள்வதில் தடுமாற்றம் ஏற்ப்பட்டுவிடுகிறது. அப்படி நடக்கும் போது, நமக்கு ஒளஷதமாக, கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தைகளிலிருந்து தான் நாம் தீர்வு காண வேண்டும்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிக்க தேவன் முடிவெடுத்த பொழுது, அவர்களை வழிநடத்தின முறையை யாத் : 13:17–14ம் அதிகாரம் வரை உள்ள வசனப்பகுதியில் வாசிக்க முடியும். இந்த வரலாற்று நிகழ்வை தியானித்து அதிலிருந்து நமக்குத் தேவையான சில பாடங்களை கற்றுக்கொள்வோம்.

ஒரு கூட்ட ஜனத்தை அடிமைத்தனத்திலிருந்தோ அல்லது ஒரு பிடியிலிருந்தோ தப்பிக்க செய்யும் பொழுது சாதகமான வழியையும், சீக்கிரமாகத்தப்பிக்க உதவும் வழியையும் தேடுவது தான் புத்திசாலித்தனமாகத் நமக்கு தோன்றும். ஆனால், தேவன் அப்படி நினைக்கவில்லை. ஏசாயா 55–ஆம் அதிகாரம் 8,9 ஆகிய வசனங்களில் நாம் வாசிப்பது போல் என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்திற்கேற்ப மிகவும் வித்தியாசமாக இஸ்ரவேலரை தேவன் வழிநடத்தினார்.

யாத் 13:17–18 ல் பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்திர வழியாய் ஜனங்களைச் சுற்றிப்போகப் பண்ணினார் என்று வாசிக்கிறோம். ஏன் அப்படி செய்தார்? பெலிஸ்தரை வீழ்த்தி சுலபமான வழியில் நடத்தி யிருக்கலாமே என்று நமக்கு எண்ணத்தோன்றும். ஆனால், அது தேவனுடைய நோக்கமாயிருக்கவில்லை என்று மட்டும் புரிகிறது. சரி, இந்த முறை மட்டும் தான் தேவன் இப்படியாக வழி நடத்தினாரா என்று எண்ணிமுடிப்பதற்குள், 14–ம் அதிகாரம் ஆரம்பித்து விடுகிறது.

14–ம் அதிகாரம் 1–2 ஆகிய வசனப்பகுதியை வாசித்தால் நம்முடைய குழப்பம் சற்று அதிகரிக்கவே செய்கிறது. தேவன் என்ன அறிவுரை தருகிறார் என்று பாருங்கள். நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளையமிறங்க வேண்டும். ஒரு தேசத்தின் அடிமைத் தனத்திலிருந்து ஜனங்களை விடுவித்து, வரவழைத்து, பிறகு தப்பிப்பதற்கே ஏதுவில்லாத ஒரு இடத்தில் பாளையமிறங்கக் கட்டளை கொடுக்கிறார். ஜனங்களுக்கு முன்பாக செங்கடல், பின்புறம் அவர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்த அதே வழி, இருபுறமும் பள்ளதாக்கு. விடுவித்து வந்த தேவன், மீண்டும் இக்கட்டான சூழ்நிலையில் இஸ்ரவேலரை வைக்கிறார். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இவை அனைத்தும் தேவன் **திட்டமிட்டு செயல்படுத்தும் காரியங்கள்.**

வசனம் 10 – ல், இஸ்ரவேல் ஜனங்கள் பார்வோன் சமீபித்து வருகிறதைப் பார்த்து, மிகவும் பயந்தார்கள் என்று வாசிக்கிறோம், பயந்து போய் என்ன செய்தார்கள்? நம்மைப்போல அவர்களும் கேள்வி தான் கேட்டார்கள். எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்திரத்தில் சாகும்படிக்கா எங்களை கொண்டு வந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினதினால் எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன ? நாங்கள் எகிப்திலே இருக்கும் போது, **நாங்கள்** எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது நலமாயிருக்குமே! என்று சொல்லித் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

இறுதியில் நடந்தது என்ன என்பதை அனைவரும் அறிவோம். செங்கடல் பிளவுபட்டது, தண்ணீர் மதிலாக நிற்க ஜனங்கள் தரையில் நடந்து செங்கடலைக் கடந்தார்கள். பிளந்த செங்கடல் திரும்பி ஒன்று சேர்ந்து பார்வோனுடைய இராணுவம் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவனாகிலும் தப்பிக்கவில்லை (21–30).

இந்த நிகழ்விலிருந்து சில முக்கியமான பாடங்களை நாம் கற்றுக் கொள்ளமுடியும். தேவனின் வழிநடத்துதலை மனிதன் புரிந்து கொள்வது கடினம். நம் வாழ்க்கையிலும் இக்கட்டான சூழ்நிலை வரும் வேளைகளில் நம் விசுவாசம் தளர்ந்து, நம்மை சோர்வடையச் செய்துவிடும். ஆனால், தேவன் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கை வேண்டும். யாத் 14–31 ல் கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள். அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்கு, பயந்து கர்த்தரிடத்திலும், மோசேயினிடத்திலும், விசுவாசம் வைத்தார்கள் என்றும் 18 – ம் வசனத்தில் எகிப்தியர் நானே கர்த்தர் என்று அறிவார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆக தேவன் இப்படியாக இஸ்ரவேலரை வழிநடத்திக் கொண்டு வந்ததற்கான காரணம் I இஸ்ரவேலர் தேவனை விசுவாசிக்க வேண்டும். எகிப்தியர் தேவன் யார் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

நம் வாழ்க்கையிலும் நாம் சந்திக்கும் சில இக்கட்டான சூழ்நிலையை தேவன் அனுமதிக்க வாய்ப்புண்டு. அப்படித்தோன்றும் நேரங்களில் ஏன் என்றும், எதற்கு என்றும் கேள்வி கேட்காமல் விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொண்டு தேவன் மீது நம்பிக்கை வைப்போமானால் அது நமக்கு நன்மையாக இருக்கும்.

எந்த ஒரு கட்டத்திலும் தேவன் இஸ்ரவேலரைளக் கைவிடவில்லை பகலிலே மேகஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்களை வழிநடத்தினது செங்கடல் பிளவுபட்டது. தேவன் பார்வோனுடைய கைகளுக்கு இஸ்ரவேலரை தப்புவித்தார். அதைப்போல கடினமான பாதையில் நம்மை நடத்தினாலும் அவர் கரம் எப்போதும் நம்முடனே இருக்கிறது. ரோமர் 8:28 ல் வாசிக்கிறபடி **சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்** என்ற விசவாசமுள்ளவர்களாக நம் பக்திவாழ்வை நாம் எப்பொழுதும் முன்னெடுத்து செல்லவேண்டும். சரியா?

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக! ✝

சிறுவர் பகுதி

# *பெலவீனர்கள் பெலமுள்ளவர்களாகும்படி அழைக்கப்பட்டார்கள் ...*

Dr. *பிரெய்ஸி*

ஹாய் குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் தேவனுடைய கிருபையால் நலமாயிருக்கிறீர்களென்றும், வீட்டில் உங்கள் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துகிறீர்களென்றும் நம்புகிறேன். இம்மாதம், தேவன் எப்படி பெலவீனமானவர்களைத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றப் பயன்படுத்துகிறார் என்பது பற்றி உங்களோடு பேசப்போகிறேன். அருமையான குழந்தைகளே, உங்களில் பலர் நாங்கள் சிறுபிள்ளைகளாயிருக்கிறோம். அதனால் தேவனுடைய பணியை எங்களால் செய்து முடிக்க முடியாது என்று நினைப்பீர்கள். ஆனால் பிள்ளைகளே பெரிய காரியங் களைச் செய்வதற்கு தேவன் பெலவீனர்களைப் பயன்படுத்துவார் என்பதை நீங்கள் கிதியோனு டைய சம்பவத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

நியாயாதிபதிகள் 6:12-16 வசனங்களில் கிதியோன் இஸ்ரவேல் ஜனங்களை மீதியானியரிடமிருந்து விடுவிக்கும் படியாக அழைக்கப்படுகிறார். அதற்கு கிதியோன் நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, **மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாகிலும் சிறியவன்** என்றான்.

ஆயினும், பிரியமான பிள்ளைகளே! கிதியோன் தன்னோடிருந்த 300 பேரைக்கொண்டு வல்லமை நிறைந்த மீதியானியரை தோற் கடித்தார் என்னும் உண்மையை வசனங் களிலிருந்து அறிந்து ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அதிலும் குறிப்பாக கிதியோனின் சேனை 300 பேராகக் குறைக்கப்பட்டு கிதியோனும் அவனோடிருந்தவர்களும், ஆயுதங்கள் எதுவுமின்றி எக்காளம் ஊதியே பலம்மிக்க மீதியானியாரைத் தோற்கடித்ததை அறிந்து ஆச்சரியப்படுவீர்கள். கிதியோனின் சேனை எக்காளம் ஊதிய உடனே மீதியோனியர்தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொள்ளும் படிதேவன் செய்தார்.

ஆகையால் அருமையான, குழந்தைகளே தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்ளவும், தேவனுடைய பணியை விருப்பத்தோடு செய்யவும் எப்பொழுதும் ஆயுத்தமாயிருங்கள். ஏனென்றால் அவர் பெலவீனர்கள் மூலமாக பெரிய காரியங்களைச் செய்கிற தேவனாயிருக்கிறார். எப்போதும் நீங்கள் செய்கிற எல்லா வற்றையும் ஜெபத்துடன் ஆரம்பியுங்கள். நீங்கள் செய்கிற எல்லாக் காரியங்களிலும் அவருடைய வழி நடத்துதலுக்காக ஜெபியுங்கள் மன்றாடுங்கள். அடுத்தமாதம் சந்திப்போம்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

---

**சிறுவர்களுக்கான வேத வினாப்போட்டி (நியாயாதிபதிகள்)**

- இஸ்ரவேலர்கள் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கப் பட்டார்கள்?
- கிதியோனின் சேனையில் எத்தனை பேர் இருந்தார்கள்?
- இஸ்ரவேலர்கள் மீதியானியரை எப்படி மேற்கொண்டார்கள்?
- கர்த்தர் தான் சேனையை வழிநடத்தும் படி கிதியோனை கேட்டுக்கொண்டார் என்பதற்கு எத்தனை அடையாளங்கள் கொடுக்கப்பட்டன?
- கிதியோனின் தகப்பன் யார்?

✝

---

## வேறு இல்லை

**கிறிஸ்துவைத்தவிர வேறு ஆகமம் இல்லை**

**வேதாகமத்தை வேறு புத்தகம் இல்லை**

**கிறிஸ்துவின் வழியைத் தவிர வேறு வழி இல்லை**

**கிறிஸ்துவின் சபையைத் தவிர வேறு சபை இல்லை**

**கிறிஸ்துவின் போதனையைத் தவிர வேறு போதனை இல்லை.**

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும்.

**நெகேமியா புத்தகத்தில் தேடிக்கண்டு பிடியுங்கள்**
**(9– 13 அதிகாரங்கள்)**

1. எந்தத் தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம் பண்ணினார்கள்?
2. அவர்கள் எதை உடுத்தி உபவாசம் பண்ணினார்கள்?
3. இஸ்ரவேல் சந்ததியார் எதை அறிகையிட்டார்கள் ?
4. லேவியருடைய படிகளின் மேல் நின்றவர்களின் பெயர்கள் என்ன?
5. நெகேமியாவின் தகப்பன் பெயர் என்ன?
6. தசமபாகத்தை யார் சேர்த்தார்கள்?
7. பென்யமீன் கோத்திரத்தார் எங்கே குடியிருந்தார்கள்?
8. எத்தனை பேர் ஆலயத்திலே பணிவிடை செய்தார்கள்?
9. செருபாபேலின் தகப்பன் பெயர் என்ன?
10. இஸ்ரவேலரை சபிக்க யாருக்கு கூலி கொடுக்கபட்டது?

## சென்ற மாத கேள்விகளுக்கு விடை எழுதியவர்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஜோசப் குமார் | - | கோவில்பட்டி |
| 2. செல்வமணி குணசேகரன் | - | காங்கயம் |
| 3. ரோஸ்லின் | - | கோவை |
| 4. ஜெபராஜ் | - | சென்னை |
| 5. மேத்யு | - | மதுரை |
| 6. சில்வியா | - | நெல்லை |
| 7. பால்ராஜ் | - | ஆத்தூர் |
| 8. டொனால்ட் | - | திருவள்ளூர் |
| 9. ஷெரின் | - | வள்ளியூர் |
| 10. மோசஸ் ராஜ்குமார் | - | சேலம் |
| 11. நான்சி பிரபாகர் | - | அரியலூர் |
| 12. ஆல்வின் | - | தூத்துக்குடி |
| 13. சாமுவேல் | - | சென்னை |

# அன்பின் மூன்று பரிமாணங்கள்

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**ன்பார்ந்த திருமறை ஆசான் வாசகர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பு எனும் மந்திரச் சொல் அகிலமெங்கும் வாழும் அனைவருடைய ஆஸ்தான சொல்லாகவும் ஆதர்ச சொல்லாகவும் இருந்து ஆளுகை செய்து கொண்டு வருகிறது. பருவங்கள் உரு மாறினாலும், துருவங்கள் மருவினாலும் அன்பபென்னும் அசைக்க முடியாத சக்தி அனைவருடைய உள்ளத்திலும் உலகம் உள்ளவரை உலா வந்துகொண்டிருக்கும் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. அன்பின் அவதாரமாகிய நம் அருமை இரட்சகர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய வாரம் அதாவது பாரில் உள்ள அனைவராலும் பாடுகளின் வாரம் என்று பரவலாக அழைக்கப்படும் அந்த வாரத்தில் யூதமதத்தைச் சேர்ந்த பல பிரிவுகளில் உள்ளவர்கள் கிறிஸ்துவின் மீது கேள்விக் கணைகளை தொடர்ச்சியாக தொடுத்து உள்ளப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் அவர்மீது தாக்குதலை நடத்தினார்கள் [மத்தேயு 22 ம் அதிகாரம் 15 ஆம்] வசனத்திலிருந்தே சரமாரியாக சகட்டு மேனிகருக் கேள்விகளைக் கேட்க தொடங்கினார்கள். அதிலும் குறிப்பாக, பரிசுத்தப் பிரமானத்தில் பரிச்சயமான பரிசேய பிரிவைச் சேர்ந்த நியாய சாஸ்திரி ஒருவன் பேச்சிலே நம் அன்பரை அகப்படுத்தும் ஆசையில் வார்த்தை வலையை வீசினான். நாசரேத்தின் நாயகனை நறுக்கென்று கேள்விகேட்டு நடுங்கச் செய்து விடலாம் எனும் நப்பாசையில் வந்த அந்த நியாயசாஸ்திரி நிசப்தமாய் நிலைகுலைந்து போனான். அவன் கிறிஸ்துவிடம் **நியாயப்பிரமாணத்திலே எந்த கற்பனைப் பிரதானமானது? என்று பிரமாதமாக கேள்வி கேட்டுவிட்டதாக நினைத்தான் அதற்கு நம் ஆண்டவர் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், அன்பு கூருவாயாக;** உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக. என்று [உபாகமம் 6:5 யையும்] [லேவியராகவும் 19:18 யையும்] மேற்கோள்காட்டி நியாயசாஸ்திரியின் வாயை அடைத்தார். மேற் சொல்லப்பட்ட இரு வசனங்களிலும் அன்பே ஆதிமுதல் ஆளுகை செய்கிறதைக் கண்டு நம்மால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. உலகிலுள்ள எல்லா மதங்களும்

அன்பெனும் அருமருந்தை முறிந்த உறவுகளை சரிபடுத்த பயன்படுத்த வேண்டும் என்று அவ்வப்போது சொல்லிவந்தாலும் அன்பையே அடித்தளமாகக் கொண்ட ஒரு மார்க்கம் உண்டானால் அது கிறிஸ்தவ மார்க்கமே . கிறிஸ்தவம் அன்பின் மார்க்கம் என்று அனைவராலும் அழைக்கப்படுவதற்கான காரணம் தேவன் மனித இனத்தின் மீதான அன்பின் நிமித்தம் தம்முடைய ஒரே பேரான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பிக் கொடுத்தார் . குமாரன் நம்மீது கொண்ட அன்பின் நிமித்தம் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். அன்பின் ஆழத்தையும்,அகலத்தையும், நீளத்தையும், ஒரு கட்டுரையில் கட்டுப்படுத்த முடியாது. இப்படி பல பரிமாணங்களில் பரிமளித்து நம்மை பரவசப்படுத்தும் அன்பின் அருகில் சென்று நெருக்கமாகப் பார்ப்போம்.

## I **அன்பின் தன்மை**

அன்பின் அவதாரமாகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய பிள்ளைகள் இவ்விதமான பரிமாணங்களில் அன்பைச் சொலுத்த வேண்டும் என்று சொன்னதன் பொருள் என்ன? இக்கேள்விக் கான பதிலை அறிய அன்பின் தன்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அன்பின் தன்மையை தன்னிகரற்ற அப்போஸ் தலனாகிய பவுல் தன்னுடைய பாணியில் I கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் வியக்தமாக விளக்குகிறார். இதற்கு முந்தைய அதிகாரத்தில் அதாவது 12 ம் அதிகாரத்தில் பவுல் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது அன்பின் மதிப்பை மட்டற்ற மகிழ்ச்சியில் மெச்சுகிறார். இன்னும் அதிக மேன்மையான வழியென்று தன்னுடைய மொழியில் முன்மொழிகிறார் (I கொரிந்தியர் 12:31). விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது என்று அப்போஸ்தலன் அன்பை அலங்கரித் திருக்கிறார். இந்மத அன்பை நம் அன்றாட ஜீவியங்களில் எப்படி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்ப்பது இயந்திர மயமான வாழ்க்கையில் இன்றியமையாததாகும்.

அண்டசராசரங்களை உண்டாக்கிய தேவன் மனித இனத்தின் மீது கொண்ட அன்பு தான் அவரை மனித இனத்துக்கு இட்சிப்பை அளிப்பதற்கு தூண்டியிருக்கிறது ( I யோவான் 3:16). இந்த அன்பு தானே பாவமறியாத பரலோகத்தின் பொக்கிஷமாகிய இயேசுவை நமக்காக ஜீவனை விட தூண்டியிருக்கிறது (I யோவான்3:16) . இந்த அன்புதான் கிறிஸ்துவுக்காக நாம் வாழ

நம்மை நெருக்கி ஏவ வேண்டும். [II கொரி 5:14,15]. இந்த அன்புதான் நாம் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க தூண்ட வேண்டும். [யோவான் 13:34].அன்பு [கலாத்தியர் 5:22,23] வசனங்களில் ஆவியின் கனிகளுள் ஒன்றாக விவரிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக பட்டியலில் முதலிடத்தை பிடித்திருப்பதன் மூலம் அதன் மூல்யம் நமக்கு விளங்கும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கனிக்கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறோம் அதிலும் குறிப்பாக ஆவியின் கனிகளுள் ஒன்றாகிய அன்பை நாம் வெளிப்படுத்தவில்லையென்றால் வெறுமனே கிறிஸ்தவர் களென்று நாம் சொல்லிக்கொள்ளலாமே தவிர வேறொன்றும் அதில் காரியமில்லை. பரந்த இவ்வுலகில் உள்ளவர்கள் நம் நரம்புகளில் அன்பு பின்னப்பட்டிருப்பதைக் கண்டு பரவசமடைந்து பரமன் இயேசுவினிடத்தில் இழுக்கப்பட வேண்டும்.

II **தேவனிடத்தில் அன்புகூருதல்**

இன்றைய நாட்களில் நாங்களும் தேவனிடத்தில் அன்புகூருகிறோம். அவரில்லாமல் எங்களால் இருக்க முடியாது என்று சற்றும் வெட்கமின்றி வெற்று வார்த்தைகளை அவிழ்த்து விடும் அரைகுறை கிறிஸ்தவர்கள் உண்மையாகவே தேவனிடத்தில் அன்பு கூருவது என்றால் என்ன என்பதை எள்ளளவும் அறியாதிருக்கிறார்கள். சிலருக்கு தேவன் எனும் வார்த்தை தேவையில் இருக்கும்போது தேவைப்படும் வார்த்தை யாகிவிட்டது. சிலரைப் பொறுத்தவரை தேவன் எனும் வார்த்தை உரையாடலின் ஊடே உபயோகப்படுத்தப்படும் வார்த்தையாகவும் உவகையின் உச்சியில் உளறும் வார்த்தை யாகவும்தான் இருக்கிறது. அதன் விளைவாகத்தான் விளையாட்டாக "**ஓ கடவுளே, ஐயோ கடவுளே**" போன்ற வார்த்தைகளை அவர்கள் சொல்கிறார்கள். சிலர் ஆபத்தின் விளிம்பில் இருக்கும்போது விழி பிதுங்கி வழியும் மொழியுமில்லாமல் இருக்கும்போது தேவன் எனும் வார்த்தையை பயன்படுத்துவது அவர்களுடைய சந்தர்ப்பவாதத்தை சமத்தாக நமக்குக் காட்டுகிறது.

தேவனிடத்தில் அன்பு கூருவது என்பது ஏதோ ஒரு ஆசீர்வாதத்தை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள அவருக்கு "ஐஸ்" வைக்கும் செயலாக இருக்கக்கூடாது. மாறாக அது நம் வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். அண்டசராசரங்களை உண்டாக்கி அனுதினமும் நம்மை வழிநடத்திவரும் அன்பின்

சொரூபியாகிய தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் ஏராளம் தாராளம், எனவே தேவனிடத்தில் அன்புகூருவது என்பது

நம் அன்றாட வாழ்வின் அங்கமாகவும், அர்ப்பணிப்பாகவும் இருக்க வேண்டும். தேவனிடத்தில் அன்புகூருவது என்பதன் உண்மையான பொருள் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப் படிவது தான் [ யோவான் 14:15, காலத்தியர் 5:6] அவரிடத்தில் அன்பு கூருவதை வெறுமனே ஒரு உணர்வாக இராமல், உள்ளப் பூர்வமான கிரியைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். என் பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியை யினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம் [I யோவான் 3:18]. நாம் தேவனிடத்தில் அன்பு கூரும் படி எபபடி கற்றுக் கொள்ளுகிறோம்? தற்செயலாகவோ தட்டுத்தடுமாறியோ அல்ல அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் போன்ற வசனங்களால் நாம் அவரிடத்தில் அன்பைக் கற்றுக்கொள்கிறோம். நாம் தேவனு டைய வார்த்தைகளுக்கு செவி சாய்த்து அவைகளை செயல் படுத்தாமல் தேவனிடத்தில் அன்பு கூருகிறோம். என்று சொல்வது அர்த்தமற்றதாகவும், அபத்தமானதாகவும் அமையும்.

III. **சக மனிதர்களிடத்தில் அன்பு கூருதல்**

தேவன் நமக்கு பல நன்மைகளைச் செய்து நம்மை வழிநடத்தி வருவதால் அவரிடத்தில் அன்பு கூர்ந்து நம் ஜீவனை பேணுவது சற்று எளிதானது தான். ஆனால் சகமனிதர்களிடத்தில் எவ்வித கைம்மாறும் கருதாமல் அன்பு கூருகிறோமா? சக மனிதர்களின் சகாயம் நமக்கு கிடைக்கவில்லையென்றால் சகட்டு மேனிக்கு அவர்கள் நடத்துவதை சகஜமாகக் கொண்டி ருக்கிறோம். பட்சபாதமில்லாத வரும் பட்சிக் அக்கினியாகவும் இருக்கிற தேவனுக்கு இது பிரியமா யிருக்குமோ? வேதாகம போதனையின் படி மனிதன் என்பவன் ஒரு இரசாயனக் கலவை அல்ல ரசனையோடு தேவனால் உண்டாக்கப்பட்ட களிமண், வேறுவிதமாகச் சொன்னால் மனிதன் தேவ சாயலில் படைக்கப் பட்டிருக்கிறான். அப்படியிருக்கும் போது நாம் தேவனிடத்தில் அன்பு கூருகிறோம் என்று சொல்லிகொண்டு தேவ சாயலில் படைக்கப்பட்டவர்களை எப்படி நேசிக்காமல் இருக்க முடியும்? தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? [I யோவான் 4:20].

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்பின் புதிய பரிமாணத்தை அறிமுகப்படுத்தினார். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் (மத்தேயு 5:44). சக மனிதர்களிடத்தில் அன்பு கூருவதையே சாதனையாக நினைக்கும் நமக்கு சத்துருக்களை நேசிப்பது சாத்தியமில்லாதது போல் தோன்றும், ஆனால் சத்திய வசனங்கள் சத்துருக்களை சிநேகிப்பது சாத்தியம் என்று சொல்லுகிற படியால் இது சாத்தியமே. அன்பு என்பது நாம் நமக்குள்ளேயே அடக்கி வைக்க வேண்டிய உணர்வு அல்ல, மாறாக மற்றவர்களிடம் அதை வெளிப்படுத்தி, பகிர்ந்து பெருக்கப்பட வேண்டிய ஓர் உணர்வு. பிரியமான தேவனுடைய பிள்ளைகளே நாம் இதுகாறும் அன்பின் மூன்று பரிமாணங்களை பார்த்தோம். அன்பின் தன்மை, தேவனிடத்தில் அன்பு கூருதல் சக மனிதர்களிடத்தில் அன்பு கூருதல், போன்றவைகள் தான் அந்த மூன்று பரிமாணங்கள். இந்த மூன்று பரிமாணங்களில் நாம் பரிச்சயமடைந்து பரிசுத்த வாக்கியங்களின் படி வாழ்க்கையை அமைத்து பரிபூரண ஆசீர்வாதங்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோமாக! ஆமென்.

✝

---

**எதைத்தெரிந்து கொள்ளுகிறீர்கள்?**

- ✤ தேவனையா அல்லது அந்நிய தேவர்களையா? (யோவான் 24:14,15)
- ✤ கிறிஸ்துவையா அல்லது பேலியாளையா? (II கொரிந்தியர் 6:15)
- ✤ ஜீவனா அல்லது மரணமா? (உபாகமம் 30:15,19)
- ✤ கிறிஸ்துவின் சபையா அல்லது மார்க்கப் பிரிவினையா? (மத்தேயு 16:18)
- ✤ தேவனுடைய வார்த்தையா அல்லது மனுஷனுடைய பாரம்பரியமா? (மத்தேயு 16:8)
- ✤ பரலோகமா அல்லது நரகமா? (வெளி 21:14,8)

# ஐசுவரியம் மட்டுமே ஆசீர்வாதமா?

**Bro. பாண்டியன்**

**தே**வக் கிருபை உங்களுக்கு பூரணமாக உண்டாவதாக! ஒரு மனிதனின் பொருளாதாரச் செழிப்பை வைத்தே பலர் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று எடை போடுகிறார்கள். ஆனால், கர்த்தரே தரித்திரம் அடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையபண்ணுகிறவருமாய் இருக்கிறார் என்று 1 சாமு 2:7ல் வாசிக்கின்றோம். அதினால் வெறும் ஐசுவரியம் மாத்திரமே ஒருவனுடைய ஆசீர்வாதத்தின் அடையாளம் ஆகிவிடாது என்று தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கின்றது. ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள். பொருளாசை யைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல! [லூக் 12:15]. ஆக, மனுஷர் நினைப்பது போல பொருளாதார வளம் மாத்திரம் உண்மை ஆசீர்வாதமாகாது.

யோபுவின் உத்தமத்தைப் பற்றி மேன்மைபடுத்தி சாத்தானிடம் தேவன் சொன்ன போது, சாத்தான் குணத்தை முக்கியப்படுத்தாமல் அவனுடைய ஐசுவரியத்திற்கு தேவ ஆசீர்வாதம் மட்டுமே காரணம் என யோபுவைப் பற்றி குறை சொன்னாள். ஏனெனில், ஆதாம் காலத்திலிருந்தே தேவ ஆலோசனைகளை மனிதன் கைக்கொள்ளக்கூடாது என்பதே பிசாசின் தந்திரமாக இருக்கின்றது. உண்ணவும் உடுக்கவும் கவலைப்படக்கூடாது என்பது ஆண்டவரின் அலோசனை. ஆனால் இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசு, அந்த இரண்டு தான் மிக முக்கியம் என மனுக்குலத்தை ஏமாற்றுகிறான். அதனால் தான் ஓட்டல்களும், ஜவுளிக்கடைகளும் விளம்பரங்களில் முதன்மையாய் மாறியிருக் கிறதைக் காண்கிறோம்.

வேதத்தில் ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு, யேசேப்பு, தாவீது போன்ற அநேக தேவதாசர்கள் ஐசுவரியவான்களாய் இருந்தார்கள் என்றாலும் இவர்களும் அநேக பிரச்சனைகளை சந்தித்தார்கள். ஆபிரகாம் ஐசுவரியத்தில் மகாபிரபு, சீமான் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறான் [ஆதி 13:2, 23:6]. ஆனால், அவன் மனைவியோ மலடியாய் இருந்தாள். உலக ஐசுவரியமல்ல தேவனே சந்ததி விருத்திக்கு காரணமானவர் [சங் 127:4]. மேலும்,

ஒரு சூழ்நிலையில் தன் மனைவியைத் தன் சகோதரி என பொய் சொல்ல வேண்டிய நெருக்கடியையும் ஆபிரகாம் எதிர் கொண்டான். அப்போதும் தேவனே தம் வல்லமையால் அவ்வூர் ராஜாவைக் கண்டித்து ஆபிரகாமுக்கு உதவி செய்தார். லோத்து மற்றும் அவன் உடைமைகள் எதிரிகளால் பறிக்கப்பட்ட போதும் ஐசுவரியமல்ல, ஆபிரகாமோடே இருந்த தேவனே எல்லா வற்றையும் மீட்டுத் தந்தார்.

எனவே நம்முடைய குடும்பத்தில் இன்றைக்கு பிள்ளைகள் உண்டு என்றால் அதற்கு காரணர் தேவனே! குடும்பம் சமாதானமிருக்க ஐசுவரியமல்ல தேவ ஞானமும் கிருபையுமே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தேவன் இணைத்ததை இவ்வுலகம் சுலபமாக பிரித்து வேடிக்கை பார்க்கிறது. ஆனால், பாதுகாத்து நடத்துகிறவராக நம் தேவன் இருக்கிறார். (பிர 9:11) அதே போல் எதிர்பாராமல் நேரிடும் இழப்புகள், விரோதங்கள் போன்ற ஆபத்துகளிலும் நம்மைக் காத்து நடத்துவதே நம் தேவனேத்தவிர நம் ஐசுவரியமல்ல என்பதை நாம் உணர்ந்து அவருக்கு நன்றியுள்ள பிள்ளைகளாய் இருக்க வேண்டும். ஆபிரகாமின் விசுவாசத்தையே தேவன் அவனுக்கு நீதியாக எண்ணினார். நாமும் விசுவாசத்தில் பெலப்படுவோம்.

யோசேப்பு எகிப்தில் ராஜாவுக்கு நிகரான ஸ்தானத்தில் உயர்த்தப்பட்டதற்கு காரணம் அவனிடம் இருந்த தேவ பயம் ஆகும். தேவன் தனக்கு சொப்பனத்தில் வெளிப்படுத்தியதை விசுவாசித்தான் பாவம் செய்து உலக சுகம் அனுபவிக்கும் வாய்ப்பு வந்தும் தேவ பயத்தால் அதை உதறித் தள்ளினான். சிறையில் வாடிய போதும் பொறுமையோடே தேவ ஐக்கியத்தில் நிலைத் திருந்தான். அந்த தேவ பயமும் பொறுமையிமே அவனுக்கு உண்மையான ஐசுவரியமாய் அமைந்தது. அதே போல் மோசேயைப் பற்றி வாசிக்கும் போது, அவன் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை விட தேவ ஜனத்தோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபி 11:24,25).

யோசேப்பு எகிப்தில் ராஜாவுக்கு நிகரான ஸ்தானத்தில் உயர்த்தப்பட்டதற்கு காரணம் அவனிடம் இருந்த தேவ பயம் ஆகும். தேவன் தனக்கு சொப்பனத்தில் வெளிப்படுத்தியதை விசுவாசித்தான் பாவம் செய்து உலக சுகம் அனுபவிக்கும் வாய்ப்பு வந்தும் தேவ பயத்தால் அதை உதறித் தள்ளினான். சிறையில் வாடிய போதும் பொறுமையோடே தேவ ஐக்கியத்தில் நிலைத்திருந்தான். அந்த தேவ பயமும் பொறுமையிமே

அவனுக்கு உண்மையான ஐசுவரியமாய் அமைந்தது. அதே போல் மோசேயைப் பற்றி வாசிக்கும் போது, அவன் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை விட தேவ ஜனத்தோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபி 11:24,25).

உலகத்திலேயே ஐசுவரியத்தோடே ஞானத்தையும் பெற்ற ஒரே மனுஷன் சாலமோன் ராஜா. ஆனால், அவனோ எல்லாம் மாயை என்றும், காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை என்றும், பணப்பிரியனும், செல்வப்பிரியனும் திருப்தி அடைவதில்லை என்றும் அனுபவித்து நமக்குச் சொல்லி இருக்கிறான். ஒரு வேளை தேவன் உங்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்திருந்தால் உன் இருதயத்தை அதின் மேல் வையாதே என்கிறார் தாவீது (சங் 62:10). அதே நேரத்தில் தன் செழிப்பிற்கு என் சாமர்த்தியமே காரணம் என்றும் சொல்லக்கூடாது என்ற ஆலோசனையும் உண்டு( உபா 8:17). ஈசாக்கின் மகன் யாக்கோபு தான் இருபது வருடம் கடினமாக உழைத்து சம்பாதித்த ஐசுவரியம் பற்றி மாமனாகிய லாபானிடம் சொல்லும் போது, என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்கு உரியவரும் என்னோடு இராமற்போனால் நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர், தேவன் என் சிறுமையையும், என் கைப்பிணரயாசத்தையும் பார்த்து உதவி செய்தார் (ஆதி 31:42) என்று அருமையாக தேவக்கிருபையை உயர்ந்து அறிக்கையிடுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத்தரும். அதினோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி 10:22)

எனவே, நாம் விசுவாசத்தில் ஐசுரியவான்கள் (யாக் 2:5) என உயர்ந்து கர்த்தருக்குள் மேன்மை பாராட்டுவோம். தேவன் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்து இருப்பதை உணர்ந்து ( எபே 1:3) நன்றி சொல்வோம். தேவபயத்தோடே விசுவாசத்தில் நிலைத்திருப்போம். ஏனெனில், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். தேவ ஆசீர் உங்களோடிருப்பதாக ஆமென். ✝

# தேவனை உறுதியாய் பற்றிக்கொள்

Bro. K.M. பிலிப்

**பி**ரியமானவர்களே! யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் என் வாழ்த்துக்கள். மனிதன் எப்பொழுதுமே ஒரு சீரான, திருப்தியான வாழ்க்கை வாழவே விரும்புகிறான். இன்பம், துன்பம், அமைதி, போராட்டம், உயர்வு, தாழ்வு, சமாதானம், சஞ்சலம் என்று மாறி மாறி வரும்பொழுது தடுமாறுகிறான். இதில், இன்பம், அமைதி, உயர்வு, சமாதானம், வரும்பொழுது சந்தோசமாய் ஏற்றுக் கொள்கிறான். ஆனால், துன்பம், போராட்டம், தாழ்வு, சஞ்சலம் வரும்பொழுதோ ஏற்க முடியாமல் நிலை குலைந்து போகிறான். முடிவில் வாழ்க்கையையே இழந்து விடுகிறான். ஆனால் தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கையில் எப்பொழுதும் எந்த சூழ்நிலையிலும் நிலை மாறுவதில்லை. நிதானம் இழப்பதில்லை. நிழலை விரும்புவது போல் வெய்யிலையும் ஏற்றுக் கொள்வான். தென்றலை வரவேற்பது போல புயலையும் சந்திப்பான். நன்மையை அனுபவிப்பதுபோல், தீமையையும் தாங்கிக் கொள்வான். இதற்கு அடிப்படைக் காரணம் **உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்** (ஏசா 26:3) **என்ற தேவ வாக்குத்தான்.**

பழைய ஏற்பாட்டில் உத்தமனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகி வாழ்கிறவன் என்று தேவனால் நற்சாட்சி பெற்றவன் யோபு. தேவன் அவனை வெகுவாய் ஆசீர்வதித் திருந்தார். (யோபு 2,3). சாத்தான் பொறாமைப்படும் அளவில் திருப்தியாய் வாழ்ந்து வந்தான். (1:10). இப்படி வாழ்ந்த யோபுவின் வாழ்வில் புயல் வீசிற்று; இடி விழுந்தது. ஒரே நாளில் எல்லாவற்றையும் இழந்து போனான். சரீர சுகத்தையும் கூட இழந்தான். இப்படிப்பட்ட நிலையிலும் தேவப் பிள்ளை யோபு தடுமாறவில்லை. நிலை குலைந்து போகவில்லை; பயந்து நடுங்கி புலம்பவில்லை. தேவனை தூசிக்கவில்லை. மாறாக, தேவனை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கிற தன் மனதைத் திறந்து வைக்கிறான். தாழ்விலும் அவன்மனநிலை, **..... கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்குள் ஸ்தோத்திரம்** (1:21) தேவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளில் பாவம் செய்யவில்லை; தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை (2:10). பக்தி

உள்ளவன் பதறான். (சங் 112:7,8). தேவன் அவன் உறுதியை கண்டார். இதற்கு பின் இரட்டிப்பான ஆசீர்வாதத்தோடே 40 ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்தான். அன்பான தேவ மக்களே! நம் தேவன் நம்மை அறிகிறவர். நாமும் யோபுவைப் போல் எல்லா நிலையிலும் உறுதியாய்ப் பற்றிக் கொண்டால் நம்மை பூரண சமாதானத்துடன் கற்றுக்கொள்வார்.

புதிய ஏற்பாட்டில் உள்ள ஆதித்திருச்சபையாரின் வாழ்க்கை யோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்போம். தேவனை உறுதியாய் பற்றிக் கொண்ட அவர்களுடைய வாழ்க்கையிலும் தென்றலும், புயலும் மாறி மாறி வீசியது. (அப் 2:42,46). அவர்கள் ஒருமனப் பாட்டவர்களாய் தேவாலயத்தில் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரி டத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். அதே சமயம் விசுவாசத் தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக் குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்த ஸ்தேவான். எதிரிகளால் கல்லெறிந்து கொள்ளப்பட்டான். (அப்.7). சபையார் சிதறடிக்கப்பட்டனர்; சிறையிலடைக்கப் பட்டனர் (8:1-4). இந்நிலையில் அவர்கள் நிலைகுலைந்து போயிருந்தால் சபை 3000, 5000, திரளானபேர் என்று விருத்தி யடைந்திருக்குமா? ஆங்காங்கே சபை கட்டி எழுப்பப் பட்டி ருக்குமா? ஆதித்திருச்சபைார் போல நாமும் தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொண்டால் நம்மைச் சுற்றி நிற்கிற சோதனைகளும், போராட்டங்களும், பயமும் வீழ்ந்துபோம். நாம் நிமிர்ந்து நின்று சபையைக் கட்டி எழுப்பி தேவனை மகிமைப் படுத்த முடியும். தேவன் நம்மை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வார்.

இப்பொழுது தேவனைப் பற்றுவதில் எவைகளில் உறுதியாய் இருக்கவேண்டும் என்று 4 காரியங்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

I. **தேவனுடைய வார்த்தையைப் பற்றிக் கொள்வதில் உறுதியாய் இருக்க வேண்டும்.**

காரணம், **வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தை ஒழிந்து போவதில்லை** (மத் 24:35) ஆம், தேவ வார்த்தை உறுதியானது. **வேதம் என்னிலிருந்து வெளிப்படும்** (ஏசா 51:4) வார்த்தையை கொடுத்த தேவனோ (நீரோ) மாறாதவராயிருக்கிறார் (சங் 102:27), உறுதியாயிருக்கிறார். அப்படியென்றால், வார்த்தையை பெற்றுக் கொண்ட நம் நிலைஎன்ன? வார்த்தையை உறுதியாய் பற்றிக் கொண்டு

வெற்றிமேல் வெற்றி பெற்ற யோசுவாவை உற்று கவனிப்போம். யோசுவா மோசேயின் பணிவிடைக்காரனாயிருந்தான் (யாத் 33:11). ஆனால், முறுமுறுப்பும், முரட்டாட்டமும், வணங்கான க்கத்துள்ளவர்களுமான இலட்சக்கணக்கான இஸ்ரவேல் மக்களை மோசேக்குப் பிறகு கானானுக்குள் வழிநடத்திச் செல்லும் மாபெரும் பொறுப்பை தேவன் யோசுவாவுக்குக் கொடுத்தார். இது எப்படி சாத்தியம் என்று அவள் அசந்து போகவில்லை; பயந்து கலங்கி நிற்கவில்லை; மாறாக, அந்த சாதனையை மிக வெற்றிகரமாய் சாதித்து முடித்தான் என்பதே சரித்திரமாகும். இந்த சரித்திர சாதனையை அவனல் எப்படி சாதிக்க முடிந்தது என்பதை அறிவதே நமக்குப் பெலனாகும்.

மாபெரும் பொறுப்பை தேவன் கொடுக்கும்போதே அதற்கு ஆதரவாக பலமான வாக்குகளையும் கொடுத்தார் (1:5-9) இந்த வல்லமையுள்ள வார்த்தையை யோசுவா உறுதியாய் பற்றிக் கொண்டதே சிறப்பாகும். இப்பொறுப்பை ஏற்ற வேகத்தில் அவன் முன் பயணத்திற்குத் தடையாய், கரைபுரண்டு ஓடிய யோர்தான் நதி ஆர்ப்பரித்தது. அப்பொழுது **நியாயப்பிரமாணத்தில் எழுதி யிருக்கிறபடி நீ செய்ய கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டு இருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய்** (1-8). என்ற தேவ வார்த்தை யோசுவாவுக்கு முன் சென்று ஆர்ப்பரித்து நின்ற யோர்தான் நதியின் மேற்பகுதி நீர்குவியலாகக். குவித்து வழிகொடுக்க இஸ்ரவேல் மக்கள் அனைவரையும் அப்பகுதியில் கொண்டு போய் சேர்த்து அவர்கள் பயணத்தை வாய்க்கச் செய்தது. தொடர்ந்து அவன் பயணத்திற்கு தடையாய் மிகப்பெரிய எரிக்கோக்கோட்டை நிமிர்ந்து நின்றது. கோட்டையின் வழியும் அடைக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், யோசுவா தான் தைரியப்பட்டதோடு, இஸ்ரவேல் மக்களை தைரியப்படுத்தி கோட்டையை 7 முறை சுற்றி வந்தார்கள். கோட்டையைபாரும் கையால் கூட தொடவில்லை. ஆனால் 7 ம் நாளில் கோட்டை இடிந்து விழுந்து தரை மட்டமாயிற்று. மிக இலகுவாக தடையைத் தகர்த்து பயணத்தைத் தொடர்ந்தார்கள். இது எப்படி? **பலங்கொண்டு திடமனதாயிரு, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருக்கிறார்** (1-9) என்ற வல்லமை மிகுவார்த் தையை யோசுவா பிடித்துக் கொண்டதே காரணமாகும். மேலும், அவர்கள் பயணத்தில் எதிரிகளின் எதிர்ப்புகள் பெரும் தடையாய் இருந்தது.அவர்களை சிதறடித்து வெற்றி பெறுவதில் சூரியன், சந்திரன் கூட அஸ்தமிக்காமல் ஒரு ஒரு பகல் முழுவதும்

வானத்திலேயே தரித்து நின்று மிகப்பெரிய வெற்றி பெறச் செய்தது. இது ஏன் நடந்தது? (10:12,3) **கர்த்தர் யோசுவாவை நோக்கி அவர்களுக்கு பயப்படாயாக...... அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை.** (10-8). என்ற வாக்கு மாறா வார்த்தையை உறுதியாய் பற்றிக்கொண்டதால்தான் தைரியமாய் செயல்பட்டு வெற்றிகள் பல பெற்று தொடர்ந்து பயணம் செய்து கானானுக்குள் பிரவேசித்தார்கள். அன்பான தேவ மக்களே, இப்பொல்லா உலகில் தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புக்களை நிறைவேற்றவும் நம் விசுவாசப் பயணத்திற்கு தடையாய் நிற்கின்ற தடைகளைத் தகர்த்து பரம கானனுக்குள் பிரவேசிக்க தேவன் நமக்குக் கொடுத்த வார்த்தைகளை யோசுவைப் போல வலது இடது புறம் விலகாமல் உறுதியாய்ப் பற்றிக் கொள்வோம் (1-7). நம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பலங்கொண்டு திடமானதாய் இருப்போம். தேவன் நம்மை பூரண சமாதானத்தால் நிரப்புவாராக ஆமென்!!

✝

---

## நாளும், நடப்பும்

- தமிழகத்தில் ஜனவரி 15 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு.
- ஊரடங்கால் இந்தியாவில் இரண்டு கோடி சம்பளதார்கள் வேலை இழப்பு.
- தமிழகத்தில் 1முதல் 12 ஆம் வகுப்புவரை பாடத் திட்டங்கள் கனிசமாகக் குறைப்பு.
- தமிழகத்தில் கொரேனா மரணம் 10,500யை தாண்டியது.
- ஐபில் கிரிக்கெட்போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் விறுவிறுப்பபாக நடந்து கொண்டிருக்கின்றன.